**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **15/06/2024** | முதல் | **19/06/2024** |
| அறிக்கை எண் : | **048/ 2024** | வெளியீட்டு நாள் : | | **14/06/2024** | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (09.06.2024 முதல் 13.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 0.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 0 | 2 | 2 |
| 35 | 37 | 39 | 38 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 37 | 38 | 37 | 37 |
| 25 | 26 | 27 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 25 | 25 |
| 4 | 3 | 4 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 6 | 6 | 5 |
| 78 | 66 | 64 | 76 | 69 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 53 | 54 | 48 | 57 | 46 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 10 | 7 | 9 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 8 | 10 | 12 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | வட மேற்கு | வட மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 16, 18 மற்றும் 19 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், வடமேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):**

### மழைப்பொழிவு :

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல், கரும்பு, கால்நடை.**

**நெல்:**

நெற் பயிரில் நூர்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படலாம். புதிதாக உருவாகும் இலைகள் சிதைந்து ஓரங்கள் சுருங்கிக் காணப்படும்.

இதனைக்கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 45கிலோ என்ற அளவில் வேப்பம்பிண்ணாக்கினை இடவேண்டும்.

மேலும் 10லிட்டர் தண்ணீருடன் 50மில்லி வேப்ப எண்ணெயினை நன்கு கலந்து இலைவழித் தெளிப்பாக தெளிக்க வேண்டும்.

**கரும்பு:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் கரும்பு பயிரில் இளங்குருத்துப் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.

இதன்தாக்கு தலானது 1 முதல் 3 மாத வயதுடைய பயிர்களில் அதிகமாகக் காணப்படும். புழுக்கள் தோகை சேரும் இடத்தில் உள்ள இளந்தண்டுகளை துளைத்து உள்ளே சென்று உண்பதால் நடுக்குருத்து காய்ந்துவிடும் இதனை இழுத்தால் எளிதில் வந்து விடும்.

இதனைக்கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 35மில்லி பிப்ரோனில் மற்றும் 10மில்லி ஒட்டும்பசை என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.